ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# தொன்மை மிகு தெய்வத் தமிழ்ப்பா

**முனைவர்செ.கற்பகம்,**

**துறைத்தலைவர், இசைத்துறை,**

**தமிழ்ப்பல்கலைக்கழகம்**

**தஞ்சாவூர்**

**ஆய்வுச்சுருக்கம்**

தொன்மையும் தொடர்ச்சியும் கொண்ட இசைத்தமிழ் வரலாற்றில் தொன்மைமிகு இசைப்பாக்கள் உள்ளன. இப்பாக்கள் தெய்வத் தமிழ்கூறும் தேவபாணிகளாக அமைந்துள்ளன. பரிபாடல், சிலம்புகூறும் வரிப்பாடல்கள் வளர்ச்சியில் பண்முறைப் பதிகம்பாடும் முறையை தென்னக இசையின் தாயாக விளங்கும் காரைக் காலம்மையார் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் வாயிலாக அருளியுள்ளார். இவற்றின் தொடர்ச்சியாக தேவாரமூவர் பாடிய தெய்வத் தமிழ்ப் பதிகங்கள் பண்முறையிலும், யாப்புமுறையிலும் அமைந்துள்ளன.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் பாடிய பதிகங்களைப் பொதுவாக தேவாரம் என்று அழைத்தாலும் திருநாவுக்கரசர் பாடிய பதிகங்களையே தேவாரம் என்று அழைக்கும் மரபுஉளது. மூவரில் காலத்தால் மூத்தவராகவும், முதலில் பண்வழிப் பதிகம்

பாடியவராகவும் திருநாவுக்கரசர் விளங்குகிறார். இவர் பாடியவற்றுள் கிடைத்துள்ள 315 பதிகங்களைநான்கு, ஐந்து, ஆறு திருமுறைகளாக நம்பியாண்டார் நம்பிவகைப் படுத்தியுள்ளார்.

இப்பதிகங்கள் இசைமற்றும் நாட்டியத்திற்குரிய பதிகங்களும் பாடல்களும் பலரால் இசைக்கப்பட்டும், ஆடப்பட்டும் வருகின்றன. இந்நிலையில் இக்கட்டுரையாளர் நாட்டிய மேடைகளில் ஆடியபாடல்கள் சிலவற்றை இக்கட்டுரை வாயிலாகத் தந்திட முனைந்துள்ளேன்.

இப்பதிகங்களில் மூன்று பதிகங்களையும், நாட்டியத் திற்குரிய பக்திகலந்த உவகைச்சுவையொடு பாடல்கள் சிலவற்றையும், தூதுரைக்கும் நிலையில் அமைந்த பாடல்கள் சிலவற்றையும், நமது உடல் உறுப்புகளால் இறைவனை வழிபடும் திருஅங்கமாலை பதிகப்பாடல் சிலவற்றையும், நாட்டிய வடிவில் இக்கட்டுரையில் தந்துள்ளேன். சுமார் 16 நூற்றாண்டுகளுக்கு முன்பு தோன்றிய தமிழ்நாட்டிய பாடல்களின் தொன்மையையும், வளத்தையும், சிறப்பையும், நுட்பத்தையும் கண்டுகேட்டு மகிழ்வோம்.

**திறவுச்சொற்கள்**

அகமரபு, மதுரபக்தி,கரணச்சிற்பங்கள், திருவங்கமாலை, தூதுப்பதிகம், திருப்பதிகங்கள்.

**முன்னுரை**

**குனித்தபுருவமுங்கொவ்வைச்செவ்வாயிற்குமிண்சிரிப்பும்**
**பனித்தசடையும்பவளம்போளமேனியிற்பால்வெண்ணீறும்**
**இனித்தமுடையவெடுத்தபொற்பாதமுங்காணப்பெற்றால்**
**மனித்தப்பிறவியும்வேண்டுவதேயிந்தமாநிலத்தே**

**நாவுக்கரசர்IV :81:4**

தில்லையில் உள்ள ஆடல் வல்லானின் திருநடனக்காட்சியை அழகிய சொல்லோவியமாகத் திருநாவுக்கரசர் இப்பாடல் வழிதந்துள்ளார். ஆடல் வல்லானின் வளைந்த புருவங்களையும் கொவ்வைக்கனி போன்றசி வந்த வாயில் முகிழ்கும் புன்னகையும், கங்கையால் ஈரமானசடை முடியையும், பவளம் போன்ற சிவந்த மேனியில் அணிந்தபால் போன்ற வெண்மையான வெண்ணீற்றுப் பூச்சினையும், பேரின்பம் நல்கும் தூக்கிய திருவடிகளையும் காணும் வாய்ப்பைப் பெறுவோமானால் இவ்வுலகில் மீண்டும் மனிதராய்ப் பிறப்பெடுத்தலும் விரும்பத்தக்கதே என்று திருநாவுக்கரசர் இந்நடனக் காட்சியைக் காண மீண்டும் பிறந்திட வேண்டும் என்று வேண்டுகிறார்.

சைவத்தில் கோயில் என்ற சிறப்பு நிலைதில்லை ஆடல்வல்லான் கோயிலைக் குறிக்கும். இதனைச் சிதம்பரம் என்று அழைக்கிறோம். சித் + அம்பரம் - சித் என்பது அறிவு. அம்பரம் என்பது வெட்ட வெளி. சிதம்பரம் என்பதற்கு ஞான ஆகாசம் என்பது பொருள். சிற்றம்பலத்தில்

நடராசர், கூத்தப் பெருமான் திருநடனம் புரிகிறார். இங்கு ஐந்து சபைகள் உள்ளன. 1.பேரம்பலம். இதனை தேவசபை என்பர். 2.சிற்றம்பலம் - நடராஜ பெருமான் திருநடனம் புரிந்தருளும் இடம். 3.கனகசபை - சிற்றம்பலத்திற்கு முன்பு உள்ள பெருமான் திருமஞ்சனம் கொள்ளும் இடம். 4.நிருத்தசபை - பெருமான் ஊர்த்துவ தாண்டவம் ஆடும் இடம். கொடிமரத்திற்குத் தென்பால் உள்ளது. 5. இராஜசபை - இது ஆயிரங்கால் மண்டபம் ஆகும்.

பூமியின் மையப் புள்ளியில் ஆடற்கலைத் தெய்வமாக விளங்கும் இத்திருக் கோயிலின் நான்கு கோபுரங்களின் கீழும் 108 கரணச்சிற்பங்கள் உள்ளன. இத்திருக்கோயிலை வழிபட்ட திருநாவுக்கரசர் பெருமான் திருவிருத்தப் பதிகப்பாடல் ஒன்றில் சொல்லோவியமாக இந்நடனக் காட்சியை அருளியுள்ளார். இத்தகு சிறப்புப் பெற்றநாவுக்கரசர் இயற்றிய தொன்மைமிகு தெய்வப்பாக்களைப் பற்றி இக்கட்டுரையின் வாயிலாகக் காண்போம்.

**திருநாவுக் கரசரின் வாழ்க்கை வரலாறு**

நாயன்மார் நால்வருள் காலத்தால் மூத்தவராகவும் (கி.பி.574-கி.பி.656) 81 ஆண்டுகள் வரை வாழ்ந்தவராகவும், தேவார மூவரில் முதலில் தேவாரம் பாடியவராகவும், காரைக்கால் அம்மையாருக்கு அடுத்த நிலையில் இசைத் தமிழ்ப்பதிகம் பாடியவராகவும் நாவுக்கரசர் திகழ்கிறார். இவர் மருள் நீக்கியார், தருமசேனர், திருநாவுக்கரசர், அப்பர், ஆளுடைய அரசர், உழவாரப் படையாளி, தாண்டகவேந்தர்,

தொண்டுகிழவர், குளிச் செழுந்த நாயனார் என்றபல் பெயர்களால் அழைக்கப்படுகின்றார். திருநாவுக்கரசு என்ற பெயரையே, அப்பூதி அடிகளார் மந்திரமாக செபித்து வழிபட்டார். இத்தகு பெரியவர் திருமுனைப் பாடி நாட்டில் உள்ள திருவாமூரில் வேளாளர் குலத்தில் குறுக்கையர் குடியில்புகழனார், மாதினியாருக்கு அன்பு மகனாகப் பிறந்தார். இவரின் தமக்கையார் திலகவதியார் ஆவார். இவரின் இயற்பெயர் மருள் நீக்கியாராகும். பெற்றோரை இழந்த பின்பு தமக்கையாரால் வளர்க்கப் பெற்றுச் சமண நெறியால் ஈர்க்கப்பட்டுத் தருமசேனர் என்ற சிறப்புப் பெயரொடு வாழ்ந்துவந்தார்.

**பதிகம்இயற்றல்**

தமக்கை யார் சிவத் தொண்டு ஆற்றி தன் தம்பியைச் சமணத்திலிருந்து மீட்டெடுக்க இறைவனிடம் வேண்டியதின் பயனால் சூலை நோய்க்கு ஆட்பட்டு, தமக்கை யார் தந்த திருவாலந் திருநீறை அணிந்து திருவைந்தெழுத்தை ஓதி, மீண்டும் சைவத்திற்கு ஆட்பட்டார்.

சூலை நோயால் ஆட்கொண்ட பொழுது “கூற்றாயினவாறு” எனத் தொடங்கும் கொல்லிப் பண்ணில் அமைந்த பதிகம் பாடி நோய் நீங்கப் பெற்று, ஈசனால் திருநாவுக்கரசு என்று அழைக்கப்பட்டார். இதுவே இவரின் முதல் பதிகமாகும்.

பின்னர்சமணரின் சீற்றத்திற்கு ஆளாகி, நீற்றறையில் ஏழு நாட்கள் தங்கி மீண்டார். நஞ்சு கலந்தபாற் சோறு ஊட்டு வித்த பொழுதும் ஈசன் அருளால் மீண்டார். பட்டத்து யானையை ஏவி, இடர்

விளைவித்த பொழுதும், “அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை” என்று மகுட மிட்டுப் பாடி மீண்டார். கல்லில் கட்டி, கடலில் எறிந்தபொழுது“ நற்றுணையாவது நமச்சிவாயவே” என்ற அருந்தொடர் கொண்ட மகா வாக்கிய மந்திரம் பாடி மீண்டார்.

சிவத்தல யாத்திரை மேற்கொண்டார். திருப்பெண்ணா கடத்தில் உள்ளதுங்கணா மாடத்து இறைவனின் “பொன்னாற் திருவடிக்கு விண்ணப்பம் ஒன்றுண்டு” என்று விண்ணப்பித்து சூலக்குறியும், இடபக் குறியும் பெற்றார்.

**அப்பர்எனஅழைக்கப்பெறல்**

தில்லைக்கு வந்து அம்பலவாணன் திருநடனக் காட்சியைக் கண்டு நாட்கள் பல தங்கி, பாமாலைகள் பல பாடிய பின், சீர்காழியில் உள்ள திருஞானசம்பந்தரைச் சந்திக்க வந்தார். சம்பந்தர் இவரை எதிர்கொண்டு “அப்பரே” என பெயரிட்டு அழைத்தார். இன்றும் நாம் சிவபெருமான் அளித்த திருநாவுக்கரசர் என்ற பெயராலும், ஞானசம்பந்தர் அழைத்த அப்பர் என்ற பெயராலும் இவரை அழைத்து வருகிறோம்.

திருநல்லூரில் ஈசனின் திருவடியால் சூட்டப் பெற்றார். திங்களூரில் வாழ்ந்த தொண்டர் அப்பூதி அடிகளின் மகனை விடத்திலிருந்து மீட்டார். திருவாரூர் பெருமானையும் பல் வேறு தலங்களையும் வழிபட்ட பின்பு இரண்டாவது முறையாகத் சம்பந்தரைத் திருப்புகலூரில் சந்தித்தார். வீழிமிழலையில் இறைவனிடம் பஞ்சம் போக்ககாசு பெற வேண்டி, படிக்காசு பெற்றுப்

பஞ்சம் போக்கினர். திருமறைக் காட்டில் திருப்பதிகம் பாடி மறைக்கதவத்தைத் திறப்பித்தார். திருவாய் மூரில் ஈசனின் திருநடனக் காட்சியைக் கண்டுமகிழ்ந்தார். பழையாறை வடதளியில் உண்ண நோன்பு இருந்து பாழியாக இருந்ததனைக் கோயிலாக ஆக்கினார். தலயாத் திரையின் பொழுது திருப்பைஞ்ஞீலியில் இறைவன் இவருக்குப் பொதிசோறு அளித்தார். கயிலை நாதனைக்காணும் ஆவல் கொண்டு கயிலைக்குப் பயணித்து, இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு, "யாதும் சுவடு படாமல் ஐயாறடைந்து" கயிலைக் காட்சியைக் கண்டார். பாண்டி நாட்டுக்குச் சென்று, பிள்ளையார் வருகைக்காக திருப்பந்துருத்தியில் மடம் அமைத்துக் காத்திருந்து மூன்றாவது முறையாகச் சம்பந்தரைசந்தித்தார். பல தலங்களை வழிபட்ட பின் இறுதியில் திருப்புகலூரில் நெடிய காலம் தங்கி, திருப்பணியாற்றி உழவாரத் தொண்டுபுரிந்து, தீந்தமிழ் மாலைகள் சார்த்திப் பொன்பொருள் பற்றற்ற வாழ்வைப் பெற்றார். அரம்பையர்களின் நடனத்தால் ஈர்க்கப் படாதவராய் ஈசனைத்தியானித்து "புண்ணியா உன் அடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்னும் திருத்தாண்டகத்தை அருளிச்செய்து, ஞானவடிவாகத் திகழ்ந்து, சித்திரை மாதத்தில் சதயத் திருநாளில் ஐக்கியம் அடைந்தார்.

இவர் ஐக்கியம் அடைந்த திருப்புகலூரில் உள்ள திருக்கயிலாய பரம்பரை வேளாக் குறிச்சி ஆதீனத்துச் சார்பில் சித்திரை சதய நாளை முன்னிட்டு பத்து நாட்கள், இவரது வரலாற்றைமைய மிட்ட

திருவிழாக்களை நிகழ்த்தி, ஐக்கிய திருவிழாவையும் இன்றும் மிகச் சிறப்போடு நடத்தி வருகின்றனர்.

**நாவுக்கரசரின் திருப்பதிகங்கள்**

நாவுக்கரசர் பாடிய வற்றில் தற்போது நமக்கு கிடைத்துள்ளவை 312 பதிகங்கள் ஆகும். இப்பதிகங்கள் 4, 5, 6 ஆம் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. 4 ஆம் திருமுறையில் முதல் 21 பதிகங்கள் பண்ணேர் வழிப் பதிகங்களாகவும், அடுத்த 58 பதிகங்கள் திரு நேரிசைப் பதிகங்களாகவும் அடுத்த 34 பதிகங்கள் திருவிருத்த பதிகங்களாகவும் ஆக 112 பதிகங்கள் 4 ஆம் திருமுறையில் உள்ளன.

5 ஆம் திருமுறை திருக்குறுந்தொகையாப்பில் அமைந்த 100 பதிகங்களாகவும், 6 ஆம் திருமுறை திருத்தாண்டகம் என்றயாப்பில் அமைந்த 99 பதிகங்களாகவும் உள்ளன. இவை அனைத்தும் இசை மற்றும் ஆடலுக் குரிய பதிகங்களாக உள்ளன.

**திருநாவுக்கரசரின் பதிகங்கள் இசைநாட்டிய வடிவில்**

திருநாவுக்கரசர் இயற்றிய திருவையாற்றில் கயிலையைக் காட்சிக்கண்ட காந்தாரப் பண்பதிகமும்,பொதுப்பதிகம் என்ற நிலையில் அமைந்த சாதாரிப் பண்ணில் அமைந்த திருவங்க மாலை பதிகமும், சொன் மாலைப் பயில்கின்ற என்று தொடங்கும் தூதுப்பதிகமும், முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள் என்ற பதிகங்களை இசைநாட்டிய வடிவில் இப்பகுதியில் காண்போம்.

**திருக்கயிலைக்காட்சி**

திருவையாற்றில் ஆடி அமாவாசையன்று திருநாவுக்கரசர் கயிலைக்காட்சி அருளும் மாபெரும் விழா ஆண்டு தோறும் மிகச் சிறப்புடன் நடந்து வருகிறது. அவ்விழாவை முன்னிட்டுத் தென்கயிலாயம் என்று போற்றப்படும் இச்சந்நிதியில் பன்னிரு திருமுறைகள் முற்றோதல் நடைபெறும். ஆடி அமாவாசையன்று கயிலைக் காட்சி தரும் விழா நடைபெறும். இந்த அற்புத விழா திருமுறைப் பாராயணத்தில் அடியார்கள் புடை சூழசீர்வளர் தருமை குரு முதல்வர் மற்றும் பல்வேறு ஆதீனங்களின் குரு முதல்வர்களும் எழுந்தருளியிருப்பர். நூற்றுக்கும் மேற்பட்ட ஓதுவா மூர்த்திகள் ஒருங்கு கூடிபக்க இசைக்கலைஞர்களுடன் திருமுறைகளில் ஏழுதிருப்பதிகங்களைப் பாடிய தேவார இசையஞ்சலியைக் கண்டு கேட்டறியாத கண்டறியாத காட்சியை இன்றும் கண்டும் கேட்டும் மகிழலாம். இவ்விழாவின் முன்னோட்டமாகத் திருநாவுக்கரசர் கயிலைக் காட்சி மேற் கொண்ட போது யாதும் சுவடு படாமல் ஐயாறு அடைந்ததையும், பறவைகளும் விலங்குகளும் சக்தியும் சிவனுமாகக் காட்சியருளும் கயிலைக் காட்சியைக் காந்தாரப் பண்ணில் “மாதர் பிறைக் கண்ணி” எனத் தொடங்கும் பதிகம் மூலம் காணலாம்.

**பாடல்பொருள்**

சிவபெருமான் அழகியபிறைச் சந்திரனைத் தரித்திருப்பவர். மலை மகளாகிய உமாதேவியை உடனாகக் கொண்டு விளங்குபவர்.

அப்பெருமானைப் பூசிப்பதற்கு நன்னீரும் அருச்சிருப்பதற்குப் பூக்களும் ஏந்திக்கொண்டு, புகழ்ப் பாக்களைப் பாடிச் செல்லும் அடியவர்கள் பின்னால் யானும் புகுவேன். உடல்தேய்ந்து, ஊர்ந்தும், புரண்டும் நைந்து செல்லுங்காலை, பொய்கையில் மூழ்கித் திருவையாற்றில் சுவடுபடாமல் எழுகின்ற பெரும் பேற்றை அடையும்போது, பிடியும், களிறும்போன்று அம்பிகையுடன் விளங்கும் ஈசனைக் கண்டேன். அப்பெருமானின் திருப்பாதங்கள் காண்பதற்கு இயலாதனவாகும். அதனையான்காணும் பேற்றினையுற்றேன் என்கிறார்.

**மாதர்ப்பிறைக்கண்ணியானை**
**மலையான்மகளொடும்பாடிப்**
**போதொடுநீர்சுமந்துஏத்திப்**
**புகுவார்அவர்பின்புகுவேன்**
**யாதும்சுவடுபடாமல்**
**ஐயாறுஅடைகின்றபோது**
**காதல்மடப்பிடியோடும்**
**களிறுவருவனகண்டேன்**
**கண்டேன்அவர்திருப்பாதம்**
**கண்டறியாதெனகண்டேன் (நாவுக் IV 21)**

திருஞானசம்பந்தர்காளத் திமலையிலிருந்து திருக்கயிலையை நோக்கிப் பதிகம் பாடினார். சுந்தரர் இறைவன் அனுப்பிய வெள்ளாணை

மீது ஏறி திருக்கயிலை யாத்திரை மேற்கொண்டார். சுந்தரரோடு சேரமான் பெருமான் நாயனாரும் புரவி மீது ஏறி திருக்கயிலை யாத்திரை மேற்கொண்டார். ஔவை யாரும் விநாயகரைத்து தித்து விநாயகர் மூலமாக திருக்கயிலைப்புக்கார். அருணகிரி பெருமானும் திருக்கயிலைச் சென்று திருப்பா அருளியுள்ளார். இந்நிலையில் திருநாவுக்கரசர் வடக்கே உள்ள திருக்கயிலையைக் கண்டு வழிபடும் பொருட்டு கயிலாயப் பயணம் மேற்கொண்டார். நடந்து நடந்து சென்றமையால் கால்கள் தேய்ந்தது. கைகளால் தவழ்ந்து சென்றமையால் கைகளும் தேய்ந்தன. மார்பால் உந்தி உந்தி சென்றமையால் மார்பும் தேய்ந்தன. உடல் உறுப்புகள் எல்லாம் பலனின்றி போகும் நிலையில் உள்ள உறுதியுடன் கிடந்தார். அப்பொழுது கயிலை நாதர்மானுட உருவில் தோன்றி கயிலையை காண்பற்கு அரிது என்றார். அதற்குத் திருநாவுக்கரசர் ஆளும் நாயகன் கயிலையின் இருக்கைக்கண்டு அல்லால்மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன் என்று உறுதியுடன் இருந்தார். நாவுக்கரசரின் உறுதிகண்டு அருகில் ஒரு பொய்கையைத் தோற்று வித்து அதில் மூழ்கி ஐயாற்றில் கயிலைக் காட்சி காண்க என்கிறார். அப்பொய்கையே கயிலையின் அருகில் இருக்கக் கூடிய மானசரோவர் என்பர். அதில் மூழ்கிய நாவுக்கரசர் திருவையாற்றின் உள்ள “உப்பனகுட்டை” என்ற குளத்தில் எழுந்தார். எழுந்த போது கயிலைக் காட்சியாக விலங்கினங்களும் பறவையினங்களும் தன் துணையுடன் மகிழ்வுடன் ஓடி வருவதைக்

கண்டு அவற்றை சக்தியும் சிவனும்கண்டு கண்டறியாதன கண்டேன் என்று பாடினார். இப்பதிகம் 11 பாடல்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பாடலிலும் தன் துணையுடன் இருக்கும் உயிரினத்தைக் குறிப்பிடுகிறார். பிடி, கோழி, வரிக்குயில், மயில், அன்றில், ஏனம், மான், நாரை, கிளி ஆகியன தன் துணையோடு விளங்கும் காட்சியைக் கண்டார். கண்டேன் அவர் திருபாதம் கண்டறியா தனகண்டேன் என்று பாடினார் என்று எண்ணு வோரும் உளர். பறவையினங்களும், விலங்கினங்களும் சக்தியும் சிவனுமாக ஆண் பெண்ணாக காணும் காட்சியே கயிலைக் காட்சியாகும். இவ்வறிய காட்சியைத் திருவையாற்றில் உள்ள தென் கயிலாயத்தில் இன்றும் ஓவிய உருவில் கண்டுமகிழலாம்.

மாதர்ப் பிறைக் கண்ணியானை என்ற திருப்பதிகத்தில் ஒவ்வொரு பாடலிலும்

**“காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்”-தி-ப.3,பா.1**

**“கோழி பெடையொடும் கூடிகுளிர்ந்து வருவன கண்டேன் - பா.4**

**“வரிக்குயில் மேடையோடு ஆடிவைகி வருவன கண்டேன்” - பா.3**

**“சிறையிளம் பேடையோடாடிச் சேவல் வருவன கண்டேன்” - பா.4**

**‘பேடை மயிலொடுங் கூடிப்பிணைந்த வருவன கண்டேன்” - பா.5**

**“பைங்கிளி பேடையோடாடிப் பறந்து வருவனகண்டேன்” - பா.6**

**“இளமண நாகுத தழுவி ஏறு வருவன கண்டேன் ” -பா.11**

இப்பதிகம் காந்தாரப் பண்ணில் அமைந்துள்ளது.

மேலும் இப்பதிகத்தில் 11 பாடல்கள் உள்ளன. வழக்கமாகப் பதிக இறுதிப் பாடலில் இராவணன் கயிலை மலையை பெயர்க்க புக்க வரலாறு கூறுவர். இப்பதிகத்தின் நாவுக்கரசர் இராவணனைப் பற்றிக் குறிப்பிடவில்லை. பாடல்கள் தோறும் கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன் என்ற தொடர் மகுடமாக அமைந்துள்ளது. மேலும், பாடல்தோறும் சிவபெருமான் அணிந்துள்ள பிறைக்கண்ணி, போழிலங்கண்ணி, எரிபிறைக்கண்ணி, பிறையிளங்கண்ணி, ஏடுமதிக்கண்ணி, நன்மதிக்கண்ணி, கடிமதிக்கண்ணி, விரும்புமதிக்கண்ணி, முற்பிறைக்கண்ணி, திங்கள்மதிக்கண்ணி, வளர்மதிக்கண்ணி என சிவபெருமானுக் குரிய பிறையையும் வருணித்துப் பாடியுள்ளார். இப்பாடல்களின் தொடக்கம் "பிறை சூடிய பெருமானின் திருமுடியையும் அவர் தம்பாதத்தையும் சுட்டிக் கூறும் நிலையை அறிந்து மகிழ்ந்து உணரலாம்" சிவபெருமான் உமையோடு காட்சி தரும் காட்சியும் பாடல்கள் தோறும் காணலாம்.

**தூதுப்பாடல் (திருப்பழனம்)**

இசை நாட்டியத் தமிழில் அகப் பொருள் பாடல்கள் அமைவதனைக் காண்கிறோம். சங்க அகப்பாடல் மரபு தெய்வத் தமிழ்க் காலத்தில் பக்தி மரபாக மலர்ந்தது. தலைவன் மீது கொண்ட தன் காதலை எடுத்துரைக்கும் சங்க அகமரபு இறைவன் மீது கொண்ட பக்தியை எடுத்துரைக்கும் பக்தி மரபாக வளர்ந்தது. இவற்றை நாட்டியத்

தமிழாக்கி நாயகன் நாயகி பாவனையால் கூறும் மரபும் வளர்ந்தது. நாட்டியத் தமிழாக்கிக் கூறும் நிலை நாயக நாயகி பாவனையில் உவகைச் சுவையை முன்னிறுத்திக் கூறும் மரபாக விரி வடைந்தது. இந்நிலையைப்பத வர்ணம் என்றும், பதம் என்று நாட்டியத்தில் கூறுவர். குறிப்பாக தொல்காப்பியர் குறிப்பிடும் எட்டு வகை மெய்ப்பாடுகள் ஒன்பான்சுவைகளாக விரிந்து, பக்தி இலக்கியங்களில் திருமுறைப்பாக்களிலும், திவ்வியபிரபந்தபாக்களிலும் ஏனையவைகளாயிலும் இவ்வகை பக்திகாதல் மரபு கூறும் பாடல்கள் ஏராளமாக உள்ளன.

**முன்னம்அவனுடையநாமங்கேட்டாள்**

**மூர்த்தியவனிருக்கும்வண்ணங்கேட்டாள்**

**பினையவனுடையஆரூர்கேட்டாள்**

**பெயர்த்தும்அவனுக்கேபிச்சியானாள்**

**அன்னையையும்அத்தனையும்அன்றேநுத்தாள்**

**அகன்றாள்அகலிட்தார்ஆசாரத்தைத்**

**தன்னைமறந்தாள்தன்நாமங்கெட்டாள்**

**தலைப்பட்டாள்நங்கைதலைவன்தாளே (நாவுக்.VI:25:7)**

இப்பாடல் திருநாவுக்கரசர் தேவாரத்தில் இடம் பெற்றுள்ளது. பதியை தலைவனாகக் கொண்டு பசுவாகிய உயிர் தலைவியாக நின்று ஆணவம் கன்மம்மாயையிலிருந்து நின்று இறைவனோடு ஒன்றி இருக்கும் நிலையை இப்பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன. இதனைக்

குறிப்பாகசை வசித்தாந்தம் நூல் "சின்முத்திரை" என்று குறிப்பிடுகின்றது. இது போன்ற முத்திரை பயன்பாடுகள் நாட்டியத் தமிழில் இறை வழிபாடுகளில் பயன்படுகின்றன.

நாயக நாயகி பாவனையில் அமையும் பக்தி இலக்கிய வகைகளுள் ஒன்றாக தூது இலக்கிய வடிவம் அமைந்துள்ளது. திருஞானசம் பந்தரின் பழந்தக்கராகப் பண்ணில் அமைந்த "சிறையாரும் மடக் கிளியே இங்கே வா" என்று தொடங்கும் பாடல் அமைந்துள்ளது. இவ்வகையில் இதே பழந்தக்கராகப் பண்ணில் திருநாவுக்கரசர் பெருமான் திருப்பழனம் என்ற தலத்தின் மீது தூதுப் பதிகம் ஒன்றைப் பாடியுள்ளார். இவற்றை நாட்டிய வடிவில் அமைக்கும் நிலையில் நாட்டியத்திற்கேற்ற சிருங்காரச் சுவை மிகச்சிறப்பாக வெளிப்படும்.

**பதிகம்தோன்றியசூழல்**

**பண்: பழந்தக்கராகம்**

**சொல்மாலைபயில்கின்றகுயிலினங்காள்சொல்லீரே**
**பன்மாலைவரிவண்டுபண்மிழற்றும்பழனத்தான்**
**முன்மாலைநகுதிங்கள்முகிழ்விளங்குமுடிச்சென்னி**
**பொன்மாலைமார்பன்என்புதுநலம்உண்டுஇகழ்வானோ**

**(நாவுக். IV :67-1)**

திருநாவுக்கரசர் அழலோம்பும் அப்பூதியடிகளின் கேண்மையை உணர்ந்து விருந்து கொள இசைந்து நஞ்சுண்ட பாலகனை எழுப்பி அனைவரது துயரமும் நீக்கி இருந்தநாளில் திருப்பழனம் பதிகம் ஒன்றில் பெருங்காதலொடு பெருமான் கழல் வணங்கி பாடிய தீந்தமிழ் தொடை மாலை பதிகங்களைப் பாடினார். மாதர் பிறை கண்ணியானை எனத் தொடங்கும் பதிகத்தின் இறுதியில் வழக்கமாக அமையும் இராவணன் கயிலையை எடுக்க புக்க செய்தி கூறப்படாதது போலவே இப்பதிகத்திலும் இடம் பெறவில்லை.

இப்பதிகத்தில் பண்மிழற்றும் பழனத்தான் மீது குயிலையும், இளங்குருகையும், பூந்தென்றலையும் செங்கால் வெண் மட நாரையும், பூவைகளையும், தலை விதூது விடுக்கிறாள். அத்தலைவன் மீது கொண்ட அழுத்தமான காதலால் உடல் மெலிய கைவளைகள் கழண்டு விழ உடலும் உள்ளமும் நலிந்து தலைவியின் சூலையை இப்பதிகப் பாடல்கள் கூறுகின்றன.

**“வஞ்சித்தென்வளைகவர்ந்தான்**

**வாரானேயாயிடினும்**

**பஞ்சிக்காற்சிறகன்னம்**

**பரந்தார்க்கும்பழனத்தான்**

**அஞ்சிப்போய்க்கலிமெலிய**

**வழலோம்புமப்பூதி**

**குஞ்சிப்பூவாய்நின்ற**

**சேவடியாய்கோடியையே ”(பதிகம்.10)**

இப்பாடலில் இரண்டடிகளை எடுப்பாக எடுத்துக் கொண்டு, மூன்று பாடல்களைத் தூதுரைக்கும் நிலையில் அமைத்துக் கொண்டு கட்டியம் அமைக்கலாம். (பா.எண்.114)

இப்பாடலில் தலைவி தலைவன் பால் குயிலைத் தூது விடுகிறாள். "உன்னை வய்யன் குயிலே" என்று மாணிக்கவாசகர் வாக்கின் வழி அறியும் குயில் நாவுக்கரசரின் பாடல் வழி தூது செல்ல அனுப்பப்படுகின்றது.

**பாடலின்பொருள்**

நல்லிசைக் கொண்டு ஈசனைப் போற்றி வாழ்கின்ற குயிலினங்காள் வண்டுகள் ரீங்காரம் செய்து பண் இசைக்கும் மாலைகள் பல வண்ணம் தரித்திருக்கும் சிவபெருமான் பழனம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருப்பவர். இளமையான பிறைச் சந்திரனைத் திருமுடியில் கொண்டு, பொன் போன்ற கொன்றை மலரைத் திருமார்பில் பொலிய விளங்குபவர். அப்பெருமான், என்னை அடிமைக் கொண்டு என் உள்ளத்தில் மேவும் அன்புத் தேனைப் பருகியவர். அவரிடம் என்னைப் பற்றிச் சொல்வீராக. அவர் உங்களை இகழேமாட்டார். அத்தகைய பேரன்பு உடையவர் அவர்.

இது அகத்துறையின் பாற்பட்டுத் தலைவி, தலைவன் பால் தூது அனுப்பும் பாங்கினில் அமைந்துள்ளது.

**பாடல்விளக்கம்**

வீட்டுத் தோட்டங்களில் விளங்கும் காஞ்சி மரங்களில் வாசம் செய்யும் இளம்பறவையே சிவபெருமான் மதம் பொருந்திய நீண்ட துதிக்கையுடைய யானையைக் கொன்று அதன் தோலைப் போர்த்திக் கொண்டவர். பல்லோராலும் பாடிப் போற்றப்படும் பழனத்தில் வீற்றிருப்பவர்.நான் நினைப்பதெல்லாம் உரைப்பாயோ முன்னர் வண்டு மொய்க்கும்கு வளைமலர் போன்ற கண்ணுடை யானைத் தூது சொல்ல அனுப்பினேன் . அவள் மயங்கினளோ என்கிறார்.

**மனைக்காஞ்சிஇளங்குருகேமறந்தாயோமதமுகத்த**
**பனைக்கைமாவுரிபோர்த்தான்பலர்பாடும்பழனத்தான்**
**நினைக்கின்றநினைப்பெல்லாம்உரையாயோநிகழ்வண்டே**
**கனைக்குவளைமலர்க்கண்ணாசொற்றூதாய்ச்சோர்வாளோ**

**(நாவுக். IV :67-3)**

மண்ணுலகத்தில் இனிது வாழும் மாந்தருக்கும், சிறப்பான ஆசாரகலசத்தோடு தூய்மையான தீர்த்தம் விண்ணுலகத்தில் பொருந்தித் திகழும் தேவருக்கும் முத்திப்பேறாய் விளங்குபவர் சிவபெருமான். அப்பெருமான், பண்ணிசை ஓங்கும்பழனத்தில் வீற்றிருக்கும் என் அப்பன் அவரை நான் கண் துஞ்சி மறையும் காலத்திலும் வழிபடாமல் இருப்பாரோ என்கிறார்.

**மண்பொருந்திவாழ்பவர்க்குமாதீர்த்தவேதியர்க்கும்**
**விண்பொருந்துதேவர்க்கும்வீடுபேறாய்நின்றானைப்**
**பண்பொருந்தஇசைபாடும்பழனம்சேர்அப்பனைஎன்**
**கண்பொருந்தும்போதத்தும்கைவிடநான்கடவேனோ**

**(நாவுக். IV :67-5)**

இத்தகு தலைவன் திருப்பழனத்தில் உள்ள இறைவனாக ஆபத் சகாயர் என்ற பெயரோடு அருளாட்சி புரிகிறார். இது ஒரு அற்புதமானதலம். சந்திரன் வழிபட்ட தலம். திருவையாற்றை மையமாகக் கொண்ட ஏழூர்தலங்களில் ஒன்று. இறைவி பெயர் பெரியநாயகி. தலமரம் வாழை. தீர்த்தம்- மங்கல தீர்த்தம். பழந்தக்க இராகப் பண்ணில் அமைந்த இப்பதிகத்தின் இறுதியில் மென்மையான சிறகுகள் கொண்ட அன்னப்பறவை உறைகின்ற பழனத்தில் இறைவன் வீற்றிருக்கின்றார் என்று உரைத்துள்ளன.

உலகம் நலம் வேண்டி வேள்விகளைப் புரியும் அப்பூதியடிகளின் திருவடிகளின் மீது மலர் போன்ற சிவபெருமானின் திருவடி விளங்குகிறது என்று அப்பூதி அடிகளையும் அவர் வேள்வி இயற்றும் திறத்தையும் திருநாவுக்கரசு பெருமான் குறிப்பிடுகிறார்.

**திருஅங்கமாலை**

திருநாவுக்கரசு பெருமான் பாடிய பதிகங்களுள் திருஅங்கமாலைப் பதிகமும் ஒன்றாகும். நல் உடலையும், நல் உள்ளத்தையும் அழகான வாழ்வையும் நமக்களித்த சிவபெருமானுக்கு நம் உடலில் உள்ள அங்கங்களால் வழிபடுவது தானே முறையாகும். இவ்அங்கங்களால் வழிபடாது அழியின் அதனால் என்ன பயன்கிட்டும். ஒரு பயனும்கிட்டடது. என வேநம் அங்கங்களால் இறைவனைப் போற்றி வழிபடும் பன்னிரு பாடல்கள் அமைந்த பதிகம் திருநாவுக்கரசரின் திருஅங்கமாலைப்பதிகமாகும். கண்ணி என்ற இசைப்பாவடிவில் இப்பதிகப் பாடல்கள் அமைந்துள்ளன.

**பதிகம்தோன்றியசூழல்**

திருநாவுக்கரசர் பெருமான் திருவையாற்றுக்கு அருகில் உள்ள திருப்பூந்துருத்தியில் விண்முட்டும் மாடம் அமைத்து, பூந்துருத்தி பொய்யிலியை நாள்தோறும் வழிபட்டு வந்தார். இக்காலத்தில் பல் வகைத் தாண்டகங்களையும் பாடியுள்ளார். நாம் அனைவரும் நற்கதியை அடைந்திட திருஅங்கமாலை என்ற இப்பதிகத்தைப் போற்றிப் பாடியுள்ளார். இது பொதுப் பதிகமாகும். சாதாரிப்பண்ணில் அமைந்துள்ளது. பாண பத்திரருக்காக விறகு விற்பவராய் வந்து வடநாட்டிலிருந்து வந்த ஏமநாதனிட மிருந்து பாண்டி நாட்டையும் பைந்தமிழையும் காத்தப் பண் சாதாரிப் பண்ணாகும். இப்பண்ணில்

அமைந்த இப்பதிகத்தில் பன்னிரு பாடல்கள் உள்ளன. இவை கண்ணிகளாக அமைந்துள்ளன. தலை, கண், செவி, மூக்கு, வாய், நெஞ்சு, கை, கால் போன்ற உறுப்புகளை உடையயாக்கை இறைவனைத் தொழாது இருப்பதால் எப்பயனையும் பெறா என்ற நிலையில் இக்கண்ணிகள் அமைந்துள்ளன. இவற்றை மட்டும் தனியாக அமைத்துக் கொண்டு அழகிய நாட்டிய நாடகமாக அமைக்கலாம்.

**பண் : சாதாரி**

**பாடலின்பொருள்:**

தலையே சிவபெருமானை வணங்குக. அப்பெருமான் தலைகளை மாலையாகக் கொண்டவர். பிரமனுடைய தலையைக் கலனாகக் கொண்டு பலி ஏற்றவர். எனவே ஈசனைத் தலையால் வணங்கி உய்தி பெறுக என்கிறார்.

**தலையேநீவணங்காய் - தலை**
**மாலைதலைக்கணிந்து**
**தலையாலேபலிதேரும்தலைவனைத்**
**தலையேநீவணங்காய் ( நாவுக். IV: 82)**

**பாடல்விளக்கம்:**

கண்களே! ஈசனைக் கண்டுகளியுங்கள். அப்பெருமான் பாற்கடலில் தோன்றிய நஞ்சினை உட்கொண்டு நீல கண்டனாக விளங்குபவர். எட்டுத் தோள்களையும் வீசி நின்று, ஆடும் பேராற்றல் உடைய

பெருமான் கண்களே அப்பெருமானைக் கண்டு தரிசித்து மகிழ்க என்கிறார்

**கண்காள்காண்மின்களோ- கடல்**

**நஞ்சுண்டகண்டன்றன்னை**

**எண்டோள்வீசிநின்றுஆடும்பிரான்தன்னைக்**

**கண்காள்காண்மின்களோ ( நாவுக். IV: 83)**

செவிகளே! ஈசனுடைய திருப்புகழ்ப் பாடல்களையும், அருட் செயல்களையும் கேட்பீராக. அப்பெருமான் எமது இறைவன் செம்பவன வண்ணம் உடையவர். தீயைப் போன்ற திருமேனியுடைய தலைவர். அப்பெருமானுடைய திருவருட் செயலைப் பிறர் கூறும் போது செவிகளே கேளுங்கள் என்கிறார்

**செவிகாள்கேண்மின்களோ- சிவன்**

**எம்மிறைசெம்பவள**

**எரிபோல்மேனிப்பிரான்திறம்எம்போதும்**

**செவிகாள்கேண்மின்களோ( நாவுக். IV: 84)**

**பாடல்விளக்கம்**

நெஞ்சே! நீ ஈசனை நினைத்து ஏத்து வாயாக அப்பெருமான் புல்லிய மென்மையான சடை முடியுடையவர். மலம் கலவப்

பெறாதவர். உமாதேவியின் மணாளர் நெஞ்சமே. அவரை நினைந்து ஏத்துக என்கிறார்.

**நெஞ்சேநீநினையாய் - நிமிர்**
**புன்சடைநின்மலனை**
**மஞ்சாடும்மலைமங்கைமணாளனை**
**நெஞ்சேநீநினையாய்( நாவுக். IV: 87)**

**பாடல்விளக்கம்**

திருமாலும் பிரமனும் தேடியும் காணப்பெறாத தலைமை உடையவர் சிவபெருமான். அப்பெருமானை நான் தேடினேன் அவர் என் உள்ளத்தில் கோயில் கொண்டு உள்ளார் என்று தேடிக்கண்டு கொண்டேன் என்கிறார்.

**தேடிக்கண்டுகொண்டேன்- திரு**
**மாலொடுநான்முகனும்**
**தேடித்தேடொணத்தேவனைஎன்னுள்ளே**
**தேடிக்கண்டுகொண்டேன் ( நாவுக். IV: 93)**

**முடிவுரை**

திருநாவுக்கரசர் பெருமான் தொண்டு கிழவராக விளங்கி தேவாரம் பாடிய முதன்மையராகத் திகழ்ந்தார். பண் சுமந்த பாடல்களோடு திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டவ

பதிகங்களை இசைத்தமிழாக்கி அமைத்துள்ளார். தமது 81ஆம் அகவையில் திருப்புகலூரில் தங்கி, உழவாரத் தொண்டுகள் பல இயற்றி, பொன்னுக்கும் பொருளுக்கும் பெண்ணுக்கும் நெஞ்சைப் பறிகொடாது பூம்புகலூர் மேவிய புண்ணியனை எண்ணி எண்ணி அவரது திருவடியில் ஐக்கியப்பட்ட நாள் சித்திரை சத்யநன்னாள். இறைவன் அருளால் இக்கொரனோ என்ற நோயினால் சிவபெருமான் அருள்பெற்று விடுபடவும் பின் வரும் சித்திரை நன்னாளில் திருப்புகலூரை அடைந்து அவர்தம் திருவடியைக்கண்டு மகிழ்வோம். 312 பதிகங்கள் கொண்டு இவரின் திருப்பதிகங்கள் இசைக்கும் ஆடலுக்கும் உரியனவாக உள்ளன. அவற்றில் ஒரு சிலவற்றை நான் ஆடியதாடு கற்பித்து வரும் நிகழ்வு இறைவன் தந்த பேறாகும்.

இத்தகு தெய்வத் தமிழ்ப்பாடல்கள் இசை நாட்டியத் தமிழுக்கு உரியன. இவற்றை உணர்ந்து சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து கற்பிக்கும் பொழுது வாழையடி வாழையென வந்ததமிழ் இறை நெறியை கற்பிக்கும் புண்ணியப் பேற்றை பெறுவோம். இவை நெஞ்சங்களில் இறை உணர்வையும் கலை உணர்வையும் மேம்படுத்தும்.

**சான்றாதாரங்கள்**

1.வித்துவான்க.வெள்ளைவாரணார், பன்னிரு திருமுறைகள் (இரண்டு பாகங்கள்), சாரதாபதிப்பகம், சென்னை,2011

2.திருநாவுக்கரசர் தேவாரம், நான்காம் திருமுறை, ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமைஆதீனம், மயிலாடுதுறை, மூன்றாம்பதிப்பு, 2011.

3.திருநாவுக்கரசர் தேவாரம் ,ஐந்தாம் திருமுறை, ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமைஆதீனம், மயிலாடுதுறை, மூன்றாம்பதிப்பு, 2011.

4.திருநாவுக்கரசர் தேவாரம் ,ஆறாம் திருமுறை, ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமைஆதீனம், மயிலாடுதுறை, மூன்றாம்பதிப்பு, 2011.

5.மூவர்தேவாரம் தலமுறை (அடங்கண் முறை),ஒன்று முதல் ஏழு திருமுறைகள், ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள், 2019.

6. ஜீ. முரளி, பன்னிரு திருமுறை, சதுராபதிப்பகம், சென்னை, 2006.

7.முனைவர்.இரா.செல்வகணபதி (பதிப்.), சைவ சமயக் கலைக் களஞ்சியம் தொகுதி/4, திருமுறைத் தலங்கள்,தெய்வச் சேக்கிழார் மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளை, சென்னை,2013.